**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு.</u>**

**<u>O.S.No.88/2025</u>**

| | |
|---|---|
| 1–ம் வாதி தரப்பு சாட்சி | **வா.சா. 1** |
| பெயர் | திருமதி. சந்தானலட்சுமி |
| கணவரின் பெயர் | திரு. சிவக்குமார் |
| கிராமம் | சென்னை |
| வட்டம் | சென்னை |
| தொழில் | இல்லத்தரசி |
| வயது | 65 |

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25–ஆம் நாளன்று, திரு.M.விக்னேஷ் பிரபு, M.L., கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் 1969–ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u> :**

1. நான் இந்த வழக்கில் 1–ம் வாதி ஆவேன். எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை முதன்மை சாட்சியமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதனை நான் சொல்லிதான் எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதனை படித்து பார்த்து, வழக்கறிஞர் படித்து சொல்ல சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| 1. | 17-05-1978 | பாக பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் - வா.சா.ஆ.1. |
| 2. | 22-01-1980 | பரிவர்த்தனை பத்திரத்தின் சான்றிட்ட நகல் - வா.சா.ஆ.2. |
| 3. | - | தாவா சொத்து வாதிகள் பெயரில் உள்ளதற்கான கணினி சிட்டா (பட்டா எண். 2536) - வா.சா.ஆ.3. |
| 4. | 19-09-2020 | பாகப்பிரிவினை பத்திரத்தின் இணைய வழி நகல் - வா.சா.ஆ.4. |
| 5. | 26-01-2025 | நாங்கள் எங்களது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல் - வா.சா.ஆ.5. |
| 6. | - | நாங்கள் கொடுத்த அறிவிப்பினை 2-ம் பிரதிவாதி சீனுவாசன் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை - வா.சா.ஆ.6. |
| 7. | - | நாங்கள் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பினை 1 மற்றும் 4 பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறை - எண்ணிக்கை - 2 - வா.சா.ஆ.7. |

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/- சந்தானலட்சுமி
சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.25 16:23:38 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**